**OS.No.03/2017**

**நாள்..** 01.12.2021

**வா.சா.1– மகேஸ்வரி**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு 7ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**7ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை –**

நான் பாகப்பரிவினை கேட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் 2ம் இலக்க சொத்துக்களுக்கு வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தாவாச் சொத்துக்கள் ஆதியில் என் தாத்தா தங்கராஜ் தேவருக்கு பாத்தியப்பட்டது. தங்கராஜ் தேவருக்கு அவருடைய தாத்தா கண்ணையாத் தேவர் உயில் எழுதிக்கொடுத்து அதன் மூலம் பாத்தியம் கிடைத்தது. அந்த உயில் 1924 ல் எழுதப்பட்டது. கண்ணையாத் தேவர் என் தாத்தா தங்கராஜ் தேவருக்கும், ராமுத் தேவருக்கும் உயில் எழுதி வைத்தார். ராமுத்தேவர் திருமணம் ஆகாமல் வாரிசு இல்லாமல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். 1924 உயில் பத்திரத்தில் ராமுத்தேவருக்கு திருமணம் முடித்து ஏதாவது சந்ததிகள், வாரிசுகள் இருந்தால் அவர்களுக்கு சொத்தில் அரைப்பங்கு சேர வேண்டும் என்றும் வாரிசு இல்லை என்றால் அந்த அரைப்பங்கு சொத்தையும் தங்கராஜ் தேவர் அடைந்துகொள்ள வேண்டியது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தங்கராஜ் தேவர் 1950 ல் இறந்துவிட்டார். தங்கராஜ் தேவரின் வாரிசுகள் மாரிமுத்து நாச்சியார், மற்றும் என் அப்பா கண்ணுச்சாமி தேவர் என்றால் சரிதான். கண்ணுச்சாமி தேவருக்கு நானும், 1ம் பிரதிவாதி நாகநாதனும், 11ம் பிரதிவாதி நம்புராஜனும், 12ம் பிரதிவாதி நம்புகுமார் மற்றும் இறந்துபோன சேதுராஜனும், அவருடைய வாரிசுகளான 2ம் பிரதிவாதி நாககன்னி, 3ம் பிரதிவாதி பவானி மற்றும் 4ம் பிரதிவாதி திவ்யா, 5ம் பிரதிவாதி விஜி, 6ம் பிரதிவாதி ரம்யாவும், இறந்துபோன முனியசாமி மற்றும் அவரது வாரிசுகளான 7ம் பிரதிவாதி சேதுலெட்சுமி, 8ம் பிரதிவாதி தங்கராஜ், 9ம் பிரதிவாதி முத்துக்குமார், 10 பிரதிவாதி கோபி ஆகியோரும் வாரிசுகள் என்றால் சரிதான். தங்கராஜ் தேவருக்கு மாரிமுத்து நாச்சியார் என்ற வாரிசு உள்ளார். மாரிமுத்து நாச்சியாருக்கு அவர் மகன் இறந்துபோன மருங்கப்பன் மற்றும் அவரது மனைவி முத்துமாரி மற்றும் மகன் சந்தான கிருஷ்ணன், கருப்பையா ஆகியோரும் மாரிமுத்து நாச்சியாருக்கு மகள் கோவிந்தம்மாளும், மற்றொரு இறந்துபோன மகள் மங்களம், மற்றும் அவருடைய மனைவி ராஜம்மமாள், மகன் பாலமுருகன், மகள் வெள்ளையம்மாள், சின்னப்பொண்ணு ஆகியோரும் வாரிசுகள் என்றால் சரிதான். மாரித்தாய் என்பவரும் மாரிமுத்து நாச்சியாரின் மற்றொரு வாரிசு என்றும் இறந்துபோன மாரித்தாய்க்கு கணவர் கருப்பையா, மகன் முருகதாஸ், குமார், மகள் பரிமளம் ஆகியோரும் வாரிசுகள் என்றால் சரிதான். தங்கராஜ் தேவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் மாரிமுத்து நாச்சியாருக்கும், கண்ணுச்சாமி தேவருக்கும் சரிசம பங்கு உண்டு

என்றால் சரிதான். மாரிமுத்து நாச்சியாருடைய வாரிசுகளை நான் இவ்வழக்கில் கட்சிக்காரர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். மாரிமுத்து நாச்சியாரின் வாரிசுகள் இவ்வழக்கிற்கு அவசியமான கட்சிகள் என்றும், அவர்களை கட்சிக்காரர்களாக சேர்க்க நான் எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்றும் சொன்னால் அவர்களை கட்சி சேர்ப்பதற்கு அவர்களே மனு தாக்கல் செய்துள்ளார்கள். என் அப்பா கண்ணுச்சாமி தேவர் தாவா 1ம் இலக்கச் சொத்தைப் பொறுத்து 13ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த விபரத்தை எப்போது தெரிந்து கொண்டேன் என்றால் 2014 ஜுன் மாதத்தில் தெரிந்து கொண்டேன். என் அப்பாவிடம் இருந்து கிரையம் வாங்கிய 13ம் பிரதிவாதி 1ம் இலக்கச்சொத்தை 14, 15 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். 14 ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்தை 28 முதல் 55 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 15 ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்தை 16 முதல் 27 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். தாவா 2ம் இலக்கச் சொத்தைப் பொறுத்து என் தகப்பனார் 61, 62 இலக்கச் சொத்துக்களைப் பொறுத்து கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். என் தகப்பனார் எழுதிக்கொடுத்த கிரையப் பத்திரங்களை ரத்து செய்வதற்கோ அல்லது செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை செய்வதற்கோ நான் பரிகாரம் கேட்கவில்லை என்றால் அதற்கு தனியாக மனுத்தாக்கல் செய்துள்ளேன். மாரிமுத்து நாச்சியாரின் வாரிசுகளை நான் கட்சி சேர்க்காத காரணத்தால் அவசியமான கட்சிகளை சேர்க்காத குறைக்கு இவ்வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

(17 முதல் 20, 22, 24 முதல் 26, 27, 30, 34, 35, 38 முதல் 40, 43, 56 முதல் 59, 64 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய ஒத்தி வைக்கப்படுகிறது)